தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7–5–1987) காலை 10–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.24 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

98. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29–9–1986-ஆம் நாளிட்ட 59282/என். யு. 2/86–2–ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 65269/என். யு.2/86 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29–9–1986-ஆம் நாளிட்ட 65270/என். யு. 2/86–2-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

101. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 9–1–1987-ஆம் நாளிட்ட 1/என். யு. 2/87-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS